2022 மே 10]

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் நகரத்திற்கு புறவழிச் சாலை அமைப்பது தொடர்பாகவும், சிறுமுகை, லிங்காபுரம் தாலுகா பகுதிகளில் இருக்கிற காந்தவியல் பகுதியில் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டுவது சம்பந்தமாகவும் ஏற்கெனவே நான் இந்த அவையில் பேசியிருக்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி. நான் அதனைப் பதிவு செய்து விட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு பதில் வாங்கித் தருவார்கள். (குறுக்கீடு) போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) போதும்.*

(எ) போளூர், பள்ளி மேற்கூரை இடிந்து விழுந்து மாணவர் உயிரிழந்தது, நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, ஒரு வரியில் சொல்லி முடியுங்கள்.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் சட்டமன்றத் தொகுதி, போளூரில் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு +1, +2 படிக்கின்ற மாணவர்கள் விடுதியில் இரவில் தூங்கிக்கொண்டிருந்தபோது, மேற்கூரை இடிந்து விழுந்ததன் காரணமாக சம்பவ இடத்திலேயே +1 மாணவர் ஒருவர் உயிரிழந்திருக்கிறார். மற்றொரு மாணவர் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெறுகிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரண நிதியிலிருந்து சிகிச்சைக்காக அந்த மாணவருக்கு . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அரசின் கவனத்திற்கு இதனைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். வேண்டிய உதவிகள் கிடைக்கும். (குறுக்கீடு) வேண்டிய உதவிகள் கிடைக்கும்.*

(ஏ) வேளச்சேரி தொகுதி, இஸ்லாமியர்களுக்கு தனி இடுகாடு அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா அவர்கள், ஒரு வரியில் சொல்லி முடியுங்கள்.*